செ.வெ.எண்: நாள்:11.01.2022

நாமக்கல் மாவட்டம்

## கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

-----

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.01.2022) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

முதலாவதாக, கபிலக்குறிச்சி நர்சரி கார்டன், கருப்பனார் கோவில் வீதி ஆகிய பகுதிகளில் மாகத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் பணியாற்றி வரும் பணியாளர்களின் வருகை பதிவேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து, கோப்பணம்பாளையம் ஊராட்சி, புங்கம்பாளையம் கிராமத்தில் தனியார் விவசாயி நிலத்தில் மண் வரப்பு பணி செய்யும் பணியாளர்கள் வருகைப் பதிவேட்டின் படி, பணிக்கு வந்துள்ளார்களா என்பதை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், கோப்பணம்பாளையம் ஊராட்சி, உரம்பூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் 5,000 எண்ணிக்கையில் நாற்றங்கால்கள் உற்பத்தி செய்யப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருவதையும் பார்வையிட்டார். உரம்பூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வகுப்பறை வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், உரம்பூர் அங்கன்வாடி மைய கட்டடத்தின் பின்புறம், சமுதாய ஊட்டச்சத்து தோட்டம் அமைத்தல் திட்டத்தின் கீழ் தக்காளி, அவரை, மிளகாய், கத்தரிக்காய், கீரைகள் உள்ளிட்ட பல்வேறு செடிகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதையும், பூங்கம்பாளையத்தில் 15-வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் ரூ.54,000 மதிப்பீட்டில் உரக்குழிக்கு பக்கச்சுவர் அமைக்கப்பட்டுள்ளதையும், ரூ.39,000 மதிப்பீட்டில் மண்புழு உரக்கொட்டகை அமைக்கப்பட்டு மண்புழு உரம் உற்பத்தி செய்யப்பட்டு வருவதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன், கபிலர்மலை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சங்கர், திரு.பாலமுருகன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.